



# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

# திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இட்டேரி ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண் - 289/1 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

| இணையதள பதிவு எண் : LWG2XCLV/2025 | அளவு - 1:800 | வ |
|---|---|---|

**குறிப்புகள்:**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 16100.00 ச.மீ (3.98ஏக்கர்) |
| உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட } | – | (-) 5455.69 ச.மீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 10644.31 ச.மீ |
| EWS மனைகளின் பரப்பளவு (மனை எண்கள் : 57-72 , 77) | – | 1103.00 ச.மீ (10.36% ) |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | – | |
| நிலையிலுள்ள சாலை | – | |
| மனைப்பிரிவு உத்தேச சாலை | – | |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | – | 75 எண்ணம் |
| ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை | – | 77 எண்ணம் |
| பூங்கா | – | 1133.28ச.மீ (10.65%) |
| புல்வெளி | – | 95.39ச.மீ |

**பொது ஒதுக்கீடுகள்:-**

I) தானபத்திரம் ஆவண எண்: 8518/2025 நாள்: 11.09.2025 மூலம் இட்டேரி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகள்

1) மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு பரப்பளவு - 5455.69 ச.மீ
2) பொது உபயோகம் (PUBLIC PURPOSE - A) (உள்ளாட்சி) - 54.28 ச.மீ (0.51%)
3) பூங்கா - 1133.28 ச.மீ (10.65%)
4) புல்வெளி - 95.39 ச.மீ

II) தானபத்திரம் ஆவண எண்: 8519/2025 நாள்: 11.09.2025 மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட பகுதி

1) மின்வாரியம் (PUBLIC PURPOSE - B) (TANGEDCO) - 54.24 ச.மீ (0.51%)

**மூலை முடக்கு**

மூலை முடக்கு - 12.0மீ அகல சாலை வரை 1.50மீ × 1.50மீ விடப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை நிலை எண்: 71 ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி துறை நாள் : 16.08.2003 - இன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலை முடக்கு மற்றும் பொது ஒதுக்கீடு பகுதியினை உள்ளாட்சிக்கு தானபத்திரம் மூலம் மனுதாரார் ஒப்படைக்கப்பட்டதை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இவ்விடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை ஏதும் செய்யப்படவில்லை என்றும், நில ஆர்ஜித நடவடிக்கை தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.
3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அகியவை சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்புத் துறையால் ரத்து செய்யப்படும்
4. அரசாணை நிலை எண்: 181 மற்றும் 141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:09.12.2020 மற்றும் 16.07.2022 -ன் படி இட்டேரி ஊராட்சித்தலைவர் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.
6. இம்மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.

ம.வ/திலி.மா.ந.ஊ.அ.எண் : 101/2025

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம்

Signature Not Verified